# Tamil Nadu Electricity Board Engineers' Sangam
## தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்
Regd. No. 124/MDS (Recognised)
(Affiliated to All India Federation of Power Diploma Engineers)
144, Electricity Avenue, Anna Salai, Chennai - 600 002.
44, Ramasamy Garden Street, Royapettah, Chennai - 600 014.
Phone : 28521968, E-mail: tnebes@yahoo.co.in

| PRESIDENT | GENERAL SECRETARY | GENERAL TREASURER |
|---|---|---|
| Er. A. ANTONY PADOVARAJ | Er. V.S. SAMPATHKUMAR | Er. G. KARTHIKEYAN |
| 9443872166 | 9840956783 | 9841150516 |


பெறுநர் : **11.05.2020**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழகஅரசு.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் - மின்சார சட்டத் திருத்தம் 2020 - உரிய முறையில் எதிர்ப்பு - தெரிவித்ததற்கு - நன்றி தெரிவித்தல் - தொடர்பாக.

வணக்கம்.

தமிழக மக்களின் நலனை மட்டுமே கொள்கையாக கொண்டு சிறப்பான ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எங்கள் தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின் சார்பில் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.

இன்று கொரோனா தாக்குதலை எதிர்த்து போராடுவதில் தங்களின் ஆளுமையில், சீரான தலைமையில், மக்கள் நல்வாழ்வுதுறை தமிழகத்தில் எடுத்துவரும் நடவடிக்கையால் மிகப்பெரிய தொற்று நோய் பரவலை தடுத்து, மக்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல், இந்திய மாநிலங்களில் தமிழகம் முன்னிலை வகிக்கிறது. இதற்காக எங்களின் பாராட்டுதலையும் போற்றுதலையும் மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறோம்.

காவிரி படுகையை வேளாண் மண்டலமாக அறிவித்தது, நீர்நிலைகளை மேம்படுத்தியது, ஒரே ஆண்டில் 11 மருத்துவ கல்லூரிகளை புதிதாக

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

தமிழகத்தில் உருவாக்கியது, காவிரி உரிமைக்காக தொடர்ந்து போராடி மாநில உரிமைகளை நிலைநாட்டுவது போன்ற மக்கள் நலப்பணிகளில் சிறப்பாக செயல்பட்டுவரும் தங்களின் சீரான தலைமையிலான தமிழக அரசை மீண்டும் ஒருமுறை பாராட்டுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

தமிழகத்தில் தற்பொழுது எடுக்கப்பட்டுவரும் கொரோனா தொற்று நோய் பரவலை தடுக்கும் பணியில் பல அரசுத்துறை நிறுவனங்களின் பணியாளர்கள் மட்டுமே, தங்கள் உயிரையும் பணயம் வைத்து போராடி வருகிறார்கள் என்பதை தாங்கள் கவனத்துடன் பார்த்து வருகிறீர்கள் என்பதை நாங்கள் அறிந்து மிகவும் பெருமை கொள்கிறோம். களப்பணியில் முன்னிற்கும் பணியாளர்களுக்கு பல சலுகைகளையும், பாதுகாப்பினையும், அவர்கள் தம் குடும்பத்தினர் நலனுக்காகவும் தங்கள் அரசாங்கம் எடுத்துவரும் நலதிட்டங்களுக்காக எங்களின் நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தற்போதைய கொரோனா தொற்று நோய் பரவலை தடுக்கும் பணியாகட்டும், இயற்கை பேரிடர்களான கஜா, ஒக்கி, தானே, பெருவெள்ளம் ஆகிய இக்கட்டான தருணங்களில் தமிழக அரசுத்துறையான மின்வாரியமும் அதன் பணியாளர்களும் தங்களின் நலன், தங்கள் குடும்பத்தினரின் நலன் ஆகியவற்றை மறந்து அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றி, தமிழக முதல்வர் அவர்களின் சிறப்பான வழிகாட்டுதலுடன் மிக குறைந்த காலத்திலேயே சேதங்கள் முழுவதையும் சரி செய்து மக்களுக்கு மின்சாரத்தை கொண்டு சேர்த்திருக்கிறோம். இப்பணிகள் தமிழக அரசின் மீது நற்பெயரையும் பாராட்டையும் பொதுமக்களிடம் ஈட்டித்தந்தது. இவை அனைத்தும் மின்சார வாரியம் தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனமாகவே இருந்ததால் சாத்தியமாயிற்று.

தமிழகத்தில் மின் துறையை பொதுத்துறை நிறுவனமாகவே தொடர்ந்து இயக்கிடும் கொள்கையில் உறுதியாக இருக்கும் தமிழக அரசுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் எங்களின் நன்றி.

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

தற்போது மத்திய மின்துறையால் கொண்டு வரப்பட்டிருக்கும் மின்சார சட்டத்திருத்த மசோதா 2020 முன்வடிவு, மின் விநியோக கட்டமைப்பினை தனியாருக்கு அளிப்பது, வீடு மற்றும் விவசாயக் பயனீட்டாளர்களை மிகவும் பாதிக்கும் மானியத்தை நேரடியாக அளிக்கும் முறை (Direct Benefit Transfer), மாநில அரசின் அதிகாரத்தினை எடுத்து மத்திய ஒப்பந்த அமலாக்க ஆணையத்திற்கு அளித்தல், மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கான தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அதிகாரத்திலிருந்து எடுத்து மத்திய அரசுக்கு அளித்தல் உள்ளிட்ட முன்வடிவுகள் ஒட்டுமொத்தமாக மின்துறையில் மாநில உரிமைகளை பறித்தல், பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் நலன்களை புறம் தள்ளுதல், தனியார் மின் உற்பத்தி நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்திற்கான விலையையும் அதற்கான தொகையையும் நேரடியாக மத்தியிலிருந்து பெறுவது, இதனால் மாநில மின் வாரியங்களுக்கும் தமிழக அரசுக்கும் மிகுந்த நிதிச்சுமையை ஏற்படுத்துதல், மானியத்தை நேரடியாக அளிக்கும் முறை (Direct Benefit Transfer) மூலம் விவசாயிகளும், நெசவாளர்களும், குடிசைவாசிகளும், வீட்டு பயனீட்டாளர்களும் மானியமில்லாத உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தை செலுத்தி, பின்னர் அவர்களுக்கு மானியத்தை நேரடியாக அளித்து, பின்னர் படிப்படியாக மானியத்தை விலக்கி கொள்வது, பொதுமக்களுக்கு வழங்கப்படும் மின்சார விலையினை உயர்த்தி சாமானியர்களுக்கு மின்சாரத்தை எட்டாகனியாக்கும் நடவடிக்கை, தனியாரை மின் விநியோகத்தில் நேரடியாக ஈடுபடுத்துவதன் மூலம் லாபம் ஈட்டக்கூடிய பகுதிகளை தனியார் எடுத்துக் கொள்வதும், மற்ற லாபம் ஈட்ட முடியாத பகுதிகளை அரசுதுறை நிறுவனமான மின் வாரியமே சுமக்க வேண்டிய கட்டாயம், போன்ற மிகவும் பாதகமான பல அம்சங்களை கொண்டுள்ளது.

மின்வாரியத்தில் பணிபுரியும் சுமார் 80 ஆயிரம் பணியாளர்களின் நலன், தமிழகத்தின் **180** லட்சம் வீட்டு மின் நுகர்வோர், **22** லட்சம் விவசாய மின்நுகர்வோர், சாமான்ய மக்கள் ஆகியவர்களின் நலனை காக்கும் விதமாக 2014ல் அன்றைய மாண்புமிகு **தமிழக முதல்வர் அம்மா** அவர்களின் ஆட்சி

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

இத்தகைய மின்சார சட்டத் திருத்தங்களை கடுமையாக எதிர்த்தது. தற்போது தொடர்ந்து தங்களின் சீரிய தலைமையிலான தமிழக அரசும் இத்தகைய மின்சார சட்டத் திருத்தங்களை தொடர்ந்து எதிர்த்து வெற்றி கண்டு வருகிறது. விவசாயத்திற்கான இலவச மின்சாரம் மூலமே தமிழகத்தின் உணவு உற்பத்தி தன்னிறைவு பெற இயலும் என்பதையும் கருத்தில் கொண்டு தாங்கள், தற்போது கொண்டு வரப்பட்டுள்ள மின்சார சட்டத் திருத்த மசோதாவில் உள்ள பாதகமான அம்சங்களை கூறி, வரைவு திருத்தங்களை கைவிடுமாறு தாங்கள் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு 09.05.2020 எழுதியுள்ள கடிதம் தமிழக மக்கள் அனைவரின் வாழ்விலும் விளக்கேற்றுவதாக உள்ளது.

மின்சார சட்டத் திருத்த மசோதா 2020 ஐ கைவிட கோரி தமிழக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் என்றும் துணைநிற்கும் என்று கூறி, மீண்டும் ஒருமுறை தங்களின் நடவடிக்கைகளுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,

( V.S.சம்பத்குமார்)
பொதுச் செயலாளர்